தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, வறட்சியின் காரணமாக நீர் குறைந்து இருக்கிறது. இங்கே பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு என்று வறட்சி நிவாரணத்தின்கீழ் இரண்டு முறை, இரண்டு தவணையாக 8,45,500 ரூபாய் அரசு மூலமாக வழங்கப்பட்டது. இருப்பினும், அங்கே தேவையான நீர் ஆதாரத்தைப் பெருக்கித் தராத காரணத்தினால், மேலும் அந்தப் பகுதியினுடைய மக்கள் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையிலே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது மிக விரைவில் அங்கே தேவைப்படுகின்ற நீர் ஆதாரத்தைப் பெருக்கி, அந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் ஏற்றி, அந்தப் பகுதி மக்களுடைய தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் என்று கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குப் போடப்பட்டுள்ள குழாய்க் கிணறு வற்றிவிடும்போது, இதனை நிர்வகிக்கும் ஊராட்சிகளில் நிதி வசதி இல்லையென, நீர் ஆதாரத்தை உருவாக்க காலம் கடத்தப்படுகிறது. அதுபோன்ற நிலைமைகள் இருக்கும்போது, இதுபோன்று திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம், மாற்றுக் குழாய், கிணறு, பைப் லைன் மற்றும் பம்ப் ஹவுஸ் கட்டி நீர் ஆதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகட்டும் அல்லது வறட்சி நிவாரணத்தின் மூலமாகட்டும் மிக விரைவில் அந்தப் பகுதியில் இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே அரசு ஆவன செய்யும் என்பதைக் கூறி அமைகிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. சி. சண்முகவேலு.

2005 மார்ச் 16]

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபதாவது முதல் இருநூற்று அறுபத்து இரண்டாவது வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.*

டாக்டர் மு. தம்பிதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஏழாவது முதல் நூற்று அறுபத்து ஒன்பதாவது வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

7. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 30—தகவல் தொழில்நுட்பவியல் துறை
(இ) கோரிக்கை எண் 32—சட்டத் துறை

(அ) கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2005–2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 3 – நீதி நிருவாகம். மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.152,51,20,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.6,72,25,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 113, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.*